செ.வெ.எண் : 12/ ஜூலை நாள் : 10.07.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## தமிழகத்தில் ரூ.4,619 கோடி மதிப்பில் 10,839 சுகாதார மையங்களை சீரமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் 09.07.2021 மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தேசிய சுகாதார இயக்க பணிகள் திட்ட இயக்குநர் மரு.தாரேஷ் அகமது,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பிரவீன்குமார்,இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள் (இராமநாதபுரம்), திரு.செ.முருகேசன் அவர்கள் (பரமக்குடி), திரு.ஆர்.எம்.கருமாணிக்கம் அவர்கள் (திருவாடானை), மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு.உ.திசைவீரன் அவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் உத்தரவின் பேரில் தமிழகத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தளபதியார் அவர்கள் 07.05.2021 தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராக பொறுப்பேற்ற போது தமிழகத்தில் கொரோனா தாக்கம் நாளொன்றுக்கு 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இது மேலும் அதிகரித்து 21.05.2021 அன்று அதிகபட்சமாக 36,184 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. கடந்த இரண்டு மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் கொரோனா வைரஸ் தொற்று தற்போது படிப்படியாக குறைந்து முழுமையாக கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 06.05.2021 அன்று 180 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இது மேலும் அதிகரித்து 15.05.2021 அன்று 399 பேருக்கு உறுதி செய்யப்பட்டது. மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட தொடர் நோய் தடுப்பு நடவடிக்கைகளின் காரணமாக மாவட்டத்தில் வைரஸ் தொற்று 09.07.2021-ல் 08 என படிப்படியாக குறைந்து விரைவில் முற்றிலும் கொரோனா வைரஸ் தொற்று இல்லாத மாவட்டமாகும் நிலை உருவாகியுள்ளது. அதேபோல தமிழகத்தில் கரும்பூஞ்சை தொற்றைப் பொறுத்தவரையில் மொத்தம் 3687 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 122 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 01 நபருக்கு கரும்பூஞ்சை பாதிப்பு கட்டறியப்பட்டு, தொடர் சிகிச்சையின் மூலம் குணமடைந்துள்ளார். இதற்காக அயராது உழைத்த சுகாதாரத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதே வேளையில் மாவட்டத்தில் நோய்தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து தொய்வில்லாமல் செயல்படுத்திட வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி எடுத்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது. ஒன்றிய அரசின் மூலம் தமிழகத்திற்கு 1.59 கோடி தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை 1,60,84,347 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. ஜூலை மாதத்திற்கான தொகுப்பாக 71 இலட்சம் தடுப்பூசிகள் வழங்குவதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. அதில் தற்போது வரை 10 இலட்சம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரை 2,88,914 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இராமேஸ்வரம் மிக முக்கிய வழிபாட்டுத்தலமாகவும் சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. அந்தவகையில் இராமேஸ்வரம் பகுதியில் மிகுந்த கவனம் செலுத்தி தடுப்பூசி போடும் பணிகளை துரிதப்படுத்திட வேண்டும். இராமேஸ்வரம் நகராட்சியில் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் சுமார் 26,000 பேர் என கணக்கிடப்பட்டுள்ளது. அதில் 6,054 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்களுக்கு இம்மாத இறுதிக்குள் தடுப்புசி செலுத்தி இராமேஸ்வரம் நகராட்சியை 100 சதவிதம் தடுப்பூசி எடுத்துக் கொண்ட நகராட்சியாக உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் தமிழகத்தில் "மக்களைத் தேடி மருத்துவ திட்டம்" என்ற திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு மருத்துவர்கள் பொதுமக்களை நேரடியாக தேடிச்சென்று பரிசோதித்து மருந்துகள், பிசியோதெரபி, டயாலிசிஸ் போன்ற சிகிச்சைகள் வழங்கிடும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் விரைவில் தொடங்கி வைக்க உள்ளார்கள். இதன் மூலம், நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு பொதுமக்கள் சிரமமின்றி மருந்துவ சிகிச்சை, ஆலோசனை மற்றும் மருந்துகள் பெற வாய்ப்பாக அமையும்.

மேலும், ஒன்றிய அரசு 15-வது நிதிக்குழு மூலம் தமிழகத்திற்கு ரூ.4,619 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் 8,713 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 2,126 துணை சுகாதார நிலையங்கள் என மொத்தம் 10,839 சுகாதார மையங்களை சீரமைத்திடவும், துணை சுகாதார நிலையங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வகையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள துணை சுகாதார நிலையங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆய்வு செய்து மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அரசுக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பித்திட வேண்டும். அதனடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆ.சிவகாமி, பொது சுகாதாரத்துறை இயக்குநர் மரு.சண்முகநாதன், மருத்துவக்கல்வி இயக்ககம் இயக்குநார் மரு.நாராயணபாபு, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.செல்வ விநாயகர், பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.து.தங்கவேல், இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.எம்.அல்லி, இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ஏ.சகாய ஸ்டீபன் ராஜ்,துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.பி.பொற்கொடி, மரு.ரவீந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**